[1979 மார்ச் 30

நெசவுத் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதித்திட்டம்.

*வினா எண். 564— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி பாக்டரிகளில் பிராவிடெண்டட் நிதி திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்ற உத்திரவு அமுலாக வில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் உத்திரவை அமுல்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் 1952-ன் கீழ் 20 அல்லது அதற்கு மேல் வேலை செய்துவரும் தனியார் தொழிலியல் நெசவு நிலையங் களில் இத்திட்டம் அமுலில் இருந்து வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர் களே, கைத்தறி பாக்டரிகளில் பிராவிடெண்ட் நிதித் திட்டத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதே திட்டம் விசைத்தறி பாக்டரிகளிலும் அமுல்படுத்த அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, பாக்டரி சட்டத்தின் கீழ் வரக்கூடிய எல்லாவற்றுக்கும், 20 பேர் களும் அதற்கு மேலும் இருக்கக்கூடிய இடங்களுக்கெல்லாம் பிராவி டெண்ட் நிதித் திட்டம் அமுலில் இருக்கிறது. ஆனால் கூட்டுறவுத் துறையில் இருந்தால் இந்த பிராவிடெண்ட் நிதித் திட்டத்தை அமுல்படுத்த வேண்டியதில்லை என்று மத்திய அரசு விதி 16(2)-ன் கீழ் விதிவிலக்குக் கொடுத்திருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த கைத்தறி, விசைத்தறி பாக்டரிகளில் 20 பேர்களும் அதற்கு மேலும் வேலை செய்து வந்தால் அங்கெல்லாம் பிராவிடெண்ட் நிதித் திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். (குறுக்கீடு). விசைத்தறியில் இப்போது 20 பேர்களுக்கு மேல் வேலை செய்தாலும் அந்தக் கணக்கை சரியாகக் காட்டாமல் மகன் பேரிலும், பேரன் பேரிலும் பிரித்து வைத்துக்கொள்கிறார்கள். அதற்கும் இத்திட்டத்தைக் கொண்டுவந்து, இப்படி பிரித்து வைப்பதைத் தடுத்து, பிராவி டெண்ட் நிதித் திட்டத்தை அமுலாக்க நடவடிக்கை எடுக்கப் படுமா?

1979 மார்ச் 30]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இவைகளை எல்லாம் நிவர்த்திக்கக்கூடிய அளவிலே ஒருகால் வரக்கூடிய சட்டமுன்வடிவு இருக்குமென்று எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கலாம். Let us hope for the best.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் பிராவிடெண்ட் நிதித் திட்டத்தை அமுல்படுத்த வேண்டாம் என்று மத்திய சர்க்கார் தாக்கீது அனுப்பியுள்ளதாகச் சொன்னார்கள். ஆகவே, கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கும் பிராவிடெண்ட் நிதித் திட்டத்தை அமுலாக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே பல்வேறு பிரச்சனைகளை எல்லாம கணக்கில் எடுத்துப் பார்த்து, சட்டப்பிரிவு 16 (2)-ன் கீழ் விதிவிலக்குத் தரலாம் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் கூட்டுறவு கைத்தறி ஆலைகளில் பிராவிடெண்ட் நிதித் திட்டம் தேவையில்லை என்று மத்திய அரசாங்கம் விதிவிலக்குத் தந்திருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரை, பல்வேறு திருத்தங்களை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறது. அவைகளைப்பற்றி பின்னால் நிச்சயமாக ஆலோசனை செய்யலாம். This is a ticklish problem. கைத்தறி நெசவுத் தொழிலில் ஏன் மத்திய அரசு இத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டாம் என்று முடிவு செய்தார்கள் என்பதை முதலில் தெரிந்துகொண்டு அதன்பின்னால் நாம் நடவடிக்கை எடுக்கலாம் என்பதால் இதுபற்றி உடனடியாக நாம் எதுவும் சொல்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பல்வேறு கைத்தறி மையங்களிலே 20-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் செயல்படக்கூடிய தொழிற்சாலைகள் எத்தனை இருக்கின்றன? அந்த அடிப்படையிலே கோவை மாவட்டத்திலே இருக்கக்கூடிய திருப்பூர், சிறுமுகை, காங்கேயம், நத்தைக்கொடையூர் போன்ற இப்படிப்பட்ட பல்வேறு பகுதிகளில் 20 கைத்தறி, 25 கைத்தறி, 30 கைத்தறி என்ற அடிப்படையில் தறிகளை வைத்துக்கொண்டு மாஸ்டர் வீவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் தொழிலாளர்களை வேலை வாங்குகிறார்கள். அப்படி இருக்கக்கூடிய இடங்களில் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் இந்த பிராவிடெண்ட் திட்டத்தை அமுலாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதைப்பற்றி அவ்வப்போது பரிசீலனை செய்து எங்கெங்கே க்ளஸ்டர்ட் அதாவது சேர்ந்தாற்போல் வேலை செய்யக்கூடிய தொழிற்சாலைகளை ஃபேக்டரி சட்டத்தின்கீழ் கொண்டுவர முடியும் என்று அரசு கருதுமேயானால் அப்பேர்ப்பட்ட கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கெல்லாம் ப்ராவிடெண்ட் பண்டு திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எங்கெங்கு இப்படி எல்லாம் இருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுப்பார்களே யானால் அதையும் பரிசீலனை செய்யலாம்.

மதுரையில் அங்காடிகள் மையம்.

*வினா எண். 565 — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரையில் ரூ. 144 லட்சத்தில் அங்காடிகள் மையம் அமைத்திடும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மதுரையில் ரூ. 40 லட்சம் செலவில் அங்காடி மையம் அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) இதற்கான வரைபடமும், மதிப்பீட்டை யும் அனுப்பியுள்ளார். இத்திட்டம் நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளயிருக்கிறது.

தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் மருத்துவ மனைகள்.

வினா எண். 566 — திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) தொழிலாளர்கள் மத்தியில் காசநோய், க்ஷயநோய் இரண்டும் மிக வேகமாக அதிகரித்து வருவதைத் தடுக்கவும் உடனே வைத்திய உதவி கிடைக்கவும் அரசு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் ஆஸ்பத்திரிகளை அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?